# தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வுகளிற்கான வழிகாட்டி

## 1. அறிமுகம்

நாட்டில் தற்போது சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வு நிலையங்கள் வியாபித்து காணப்படுகின்றது. இப்பிணியாய்வு நிலையங்களில் வழங்கப்படும் சேவையை தரமுயர்த்தி ஒழுங்கமைப்பதற்கும், புதிய பிணியாய்வு ஒன்றை ஆரம்பிப்பதற்கான முக்கியத்துவத்தை கண்டறிவதற்கும், தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வு தொடர்பான அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவசியமான தருணமாக இது கருதப்படுகிறது.

## 2. நோக்கம்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தாய், சேய் மற்றும் குடும்பத் திட்டமிடல் சேவையின் தரத்தை மறு சீரமைப்பு செய்வதன் மூலம், சேவை பெறுநருக்கு தரமான சேவையை பெற்றுக் கொடுப்பதை நோக்கமாக கொண்டு இவ்வழிகாட்டி தயார் செய்யப்பட்டுளளது.

## 3. பிணியாய்வு ஒன்றை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அமைய வேண்டிய காரணிகள்

குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பிரிவு மூன்றிற்கு அல்லது சனத்தொகையில் 10,000 பேருக்கு ஒரு தாய் சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வை நடாத்துவது மிகவும் உகந்ததாகும். எனினும் அப்பகுதியின் சனத்தொகை, இனப்பல்வகைமை, போக்குவரத்து வசதி, பிணியாய்வு நிலையங்களின் பரம்பல் மற்றும் வேறு விசேட தேவைக்கேற்ப மாறுபடலாம். எனினும் அது தொடர்பான இறுதி தீர்மானமானது மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) மற்றும் தாய், சேய் சுகாதார மருத்துவ அதிகாரி (MOMCH) ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே எடுக்கப்படுதல் வேண்டும்.

சுகாதார அமைச்சின் கீழ் அங்கீகாரம் பெறப்பட்ட திட்டங்களிற்கு அமைவாக புதிய கட்டிட நிர்மாணப்படிகள் மேற்கொள்ளப்படுவதுடன் பழைய கட்டிடங்களை திருத்தியமைப்பதற்கும் தேவையான நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சகல பிணியாய்வு நிலையங்களிலும் சிறு தோட்டம் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் , பிணியாய்வு நிலைய சுற்றுப்பற சூழல் பாதுகாப்பையும் உறுதி செய்வது அவசியமாகும்.

**3.1 புதிய பிணியாய்வு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான இடத்தை தெரிவு செய்யும் போது** கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

- அரசாங்கத்திற்குரிய இடம்
- போக்குவரத்து வசதி
- மின்சார வசதி
- நீர் விநியோகம்
- பிரதேசத்தின் மத்திய பகுதியில் அமைந்திருத்தல் : (இது புவியியல் அமைப்பிற்கு ஏற்ப மாறுபடலாம்).

## 4. பிணியாய்வு வகைகள்

பிணியாய்வுகளான கா்ப்பிணித் தாய்மாா்களிற்கான, குழந்தைகளிற்கான, குடும்பத்திட்டமிடலிற்கான, மகப்பேற்றிற்கு பின்னான, புதுமணத்தம்பதிகளிற்கான, சுகவனிதையருக்கான, போஷணைக்கான, யௌவனப் பருவத்தினருக்கான அல்லது விருத்திக்கான வகைகளாகவோ அமையலாம்.

மேலும் இதனை ஒற்றை, இணைந்த, பன்முக அல்லது இணைந்த பிணியாய்வாகவோ முன்னெடுக்கலாம்.

- ஒற்றை பிணியாய்வு
  - கா்ப்பிணித்தாய்மாா்களுக்கான பிணியாய்வு
  - குழந்தைகளுக்கான பிணியாய்வு
  - குடும்ப திட்டமிடல் பிணியாய்வு
  - மகப்பேற்றுக்கு பின்னரான தாய்மாா் பராமரிப்பு
  - புதுமணத்தம்பதிகளுக்கான பிணியாய்வு
  - சுகவனிதயா் பிணியாய்வு

- இணைந்த பிணியாய்வு (இரண்டு வகையான சேவைகள் வழங்கப்படுதல்)
  - தாய் + சேய்
  - தாய் + குடும்ப திட்டமிடல்
  - சேய் + குடும்ப திட்டமிடல்

- பன்முக பிணியாய்வு (இரண்டிற்கு மேற்பட்ட சேவைகள் வழங்கப்படுதல்)-
  - தாய் + சேய் + குடும்ப திட்டமிடல்
- மத்திய பிணியாய்வு
- விசேட பிணியாய்வு
  - போஷணை தொடர்பான பிணியாய்வு
  - வளர்ச்சி/ விருத்தி தொடர்பான பிரச்சனைகளை கொண்ட குழந்தைகளிற்கான பிணியாய்வு (comment)
  - புதுமணத்தம்பதிகளிற்கான பிணியாய்வு
  - யௌவனப்பருவத்தினருக்கான பிணியாய்வு

ஒற்றை மற்றும் இணைந்த பிணியாய்வுகளை நடாத்த முடியும் எனினும் அதிகளவில் திறன்வாய்ந்ததாக காணப்படுவது பன்முக பிணியாய்வு ஆகும். தரமான சேவையை வழங்குவதற்கு பன்முக பிணியாய்வு ஒன்றிற்கு அனுமதிக்கப்பட கூடிய சேவை பெறுநர்களின் எண்ணிக்கையானது கர்ப்பிணித்தாய்மார்களின் 20-40 உம் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் எனின் 30-40 உம் குடும்ப திட்டமிடல் 30 உம் ஆகும்.

பிணியாய்வு நாளொன்றில் குறிப்பிட்ட பிணியாய்வு வகைக்கேற்ப வழங்கப்பட வேண்டிய அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொடுத்தல் அதிகாரியின் கடமையாகும். பன் முக பிணியாய்வு ஒன்றை முன்னெடுக்கப்படும் போது பிணியாய்வில் செலவிடும் நேரத்தை குறைப்பதற்கு தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் சேவை பெறுநர்கள் வருகை தருவதற்கான வெவ்வேறு நேரம் வழங்கப்படுதல் வேண்டும்.

உ+ம்

கர்ப்பிணித்தாய்மார்களிற்கு - மு.ப 07.30 மணிக்கும்

ஐந்து வயதிற்கு கீழான குழந்தைகளிற்கு - மு.ப.10 மணிக்கும்


குடும்ப திட்டமிடல் சேவை பி.ப 01.00 மணிக்கும் ஆரம்பித்தல் உகந்தது.

சேவை பெறுநர் ஒருவர் தமது சேவையை பிணியாய்வு நிலையத்தினுள் முற்றாக பெற்றுக்கொள்வதற்காக ஆகக்கூடியது 2 மணித்தியாலமாக மட்டுப்படுத்தப்படுதல் அவசியமாகும்.

பிணியாய்வின் செயற்பாடுகளை ஒரு குறிப்பிட்ட படிமுறைக்கேற்ப அமைப்பதன் மூலம் சேவை பெறுநர் அதன் சேவையை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் பிணியாய்வின் அமைவிடம் அதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒரே வகையான சேவையினை பெறுவதற்கு வருகை தருபவர்களுக்கும் வெவ்வெறு நேரம் வழங்கப்பட முடீயும். ( உ+ம் : கர்ப்பிணித் தாய்மார்களின் முதல் தரிசிப்பு மற்றும் மேலதிக தரிசிப்பு). இது நேரத்தை மீதப்படுத்துவதுடன் சேவையின் தரத்தையும் அதிகரிக்கின்றது. சேவை பெறுநர் ஒருவர் தமது சேவையினை பிணியாய்வு நிலையத்தினுள் முற்றாக பெற்றுக்கொள்ள முடியும். பிணியாய்வின் அமைவிடம் அதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உதாரணம்: கர்ப்பிணித்தாய்மார்களிற்கான பிணியாய்வில்

உட்செல்லுதல் → பதிவு செய்தல் → சுகாதாரக்கல்வி → அடிப்படை சோதனைகள் → மருத்துவ பரிசோதனைகள் → கருத்துரை வழங்குதல் → தடுப்பூசி வழங்குதல் → மருந்துகள்/திரிபோஷா விநியோகித்தல் → வெளியேறுதல்




## 5. பிணியாய்வு நடத்தப்படக்கூடிய இடங்கள்

### 5.1. வெளிக்கள பிணியாய்வு (field clinic)

இது பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான இடத்தில் நடத்தப்பட வேண்டியதுடன் இப்பிணியாய்வு நிலையத்தின் கட்டிடத்தை தெரிவு செய்யும் போது இல 04 இல் குறிப்பிட்ட காரணிகளை கருத்தில் கொள்ளல் அவசியம்.

### 5.2. மத்திய பிணியாய்வு (central clinic)

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும் ஒரு மத்திய பிணியாய்வானது ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடத்தப்படல் வேண்டும். அத்துடன் அந்நாளில் அனைத்து வகையான சேவைகளும் வழங்கப்படுதல் வேண்டும். (தாய், சேய் மற்றும் குடும்பத்திட்டமிடல், புதுமணத்தம்பதியினர் சேவை, சுகவனிதையர் சேவை, பள்ளி மாணவர் பரிசோதனை மற்றும் மேலதிக பரிசோதனைகளிற்கு பரிந்துரைத்தல். இப்பிணியாய்விற்கு உகந்த இடமாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் கருதப்பட்டாலும் சேவைபெறுநரின் வசதிக்கேற்ப இடம் மாறுபடலாம்.

### 5.3 வைத்தியசாலை பிணியாய்வு (Hospital clinic)

சகல மாவட்ட வைத்திய சாலைகள்/ மகப்பேற்று வாட்டு மற்றும் மத்திய மருந்தகங்களிலும் தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வுகள் நடத்துதல் கட்டாயமானதாகும். அனைத்து வைத்திய சாலைகளிலும் தனியான குடும்ப திட்டமிடல் பிணியாய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும். (FHB/FB/01/2015-11.08.2015 சுற்றுநிருபத்தை பார்க்க

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கு அமைவாக பிணியாய்வுகள் நடாத்தப்படுவதனை உறுதிசெய்வது வைத்தியசாலை பிணியாய்விற்கு பொறுப்பான வைத்தியஅதிகாரி/உதவி வைத்திய அதிகாரி / தாதியர்/குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கட்டாயமாக பிணியாய்வு நிலையத்திற்கு சமுகமளித்தல் வேண்டும். வைத்தியசாலை பிணியாய்விற்கு அனுப்பப்படும் பிரதேசத்திற்குரிய கு.சு.சே.உ மிகவும் திறனாக பங்களித்தல் வேண்டும். அனைத்து ஊழியர்களும், நிறுவன சுற்று நிருபம் மற்றும் வழிகாட்டிகளில் புது விடயம் தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும்.

ஒரு உதவி வைத்திய அதிகாரி/கடமையில் இருக்கும் வைத்திய அதிகாரி அல்லது உதவி வைத்திய அதிகாரி ஒருவர் மட்டும் பணிபுரியும் மத்திய மருந்தகம் கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றில் 1984.12.03 ம் தினத்திற்குரிய பொது சுற்று நிருப இலக்கம் 1353ற்கு அமைவாக வெளிநோயாளர் சேவை வழங்குவதை தவிர்த்து தாய், சேய் மற்றும் குடும்ப திட்டமிடல் பிணியாய்வை நடத்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுமிடத்து தாய் மற்றும் சேய் சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியை நாடவும் . விசேட வைத்திய நிபுணர் பணிபுரியும் வைத்தியசாலைகள் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளிற்கு உள்வாங்கப்படவில்லை.

## 6. பிணியாய்வு நிலையப் பெயர்ப்பலகை

திணைக்கள விதிமுறைகளிற்கமைய பெயர்ப்பலகை தயாரிக்கப்பட்டு தெளிவாக தெரியக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும். 'தாய்- சேய் பிணியாய்வு நிலையம்' என்ற வாசகம் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருத்தல் வேணடும். பிணியாய்வு நிலையமானது பிரதான வீதியில் அமையாவிடத்து இவ்வழிகாட்டி பலகையானது பிரதான பாதையில் இடப்படல் வேண்டும்.

## 7. பிணியாய்வு நடாத்தப்படும் தடவைகள்

சகல பிணியாய்வு நிலையங்களிலும் பிணியாய்வானது இரு வாரங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கட்டாயமாக மத்திய பிணியாய்வின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

விசேட வைத்திய நிபுணர் சேவை புரியும் வைத்தியசாலைகளில் குடும்ப திட்டமிடல் பிணியாய்வானது தினசரி நடத்தப்பட வேணடியதுடன் ஏனைய வைத்திய சாலைகளில் வாரம் ஒரு முறை நடைபெறுதல் வேண்டும்.

வருடத்தின் ஆரம்பத்தில் வருடாந்த பிணியாய்வு தொடர்பான அட்டவணையினை பிணியாய்வில் பிரசன்னப்படுத்தப்பட வேண்டும்.

## 8. பிணியாய்வை ஆரம்பித்தல்

மு.ப. 7.30 - சேவை பெறுநருக்காக பிணியாய்வு நிலையம் மு.ப 7.30 மணிக்கு திறக்கப்படல் வேண்டும்.

மு.ப. 7.30 – பி.ப.3.30 சேவை வழங்கல் நேரம்.

## 9. வழங்கப்பட வேண்டிய சேவைகள்

- தாய்மார் பாரமரிப்பு சேவை
- பிரவசத்திற்கு பின்னரான தாய்மார் பராமரிப்பு சேவை
- சேய் பராமரிப்பு சேவை
- குடும்ப திட்டமிடல் சேவை
- சுகவனிதயர் சேவை
- புதமணத்தம்பதியினருக்கான சேவை

- சுகவனிதயர் பிணியாய்வு சேவைகள்
- போஷணை தொடர்பான சேவைகள்
- சுகாதார கல்வி சேவை

**வழங்கப்படவேண்டிய ஏனைய சேவைகள்**

- ஆலோசனை வழங்கல் சேவை
- பாடசாலை மாணவர்களிற்கான பிணியாய்வு சேவை
- கட்டிளமை பருவத்தினருக்கான பிணியாய்வு சேவை
- வேறு அடிப்படை சுகாதார சேவை
- திருமனம் புரிய திட்டமிட்டுள்ளவர்க்கு கலந்துரை வழங்கல் ( premarital councelling) மற்றும் குழந்தைப்பேற்றை எதிர்பார்க்கும் தாய்மாரை பரிசோதித்தல் (pre-pregnant screening)

பிணியாய்வு நிலையங்களிற்கு வருகை தரும் பிள்ளைகளின் மனநல விருத்தியை மேம்படுத்த பிணியாய்வு நிலைய வளாகத்தில் விளையாடுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும். இதற்காக ஊஞ்சல், சீ-சோ, வழுக்கும் பலகை நிர்மாணிப்பது என்பனவற்றை நிர்மானிப்பது உகந்தது. இதனை அமைக்கும் போதும் பராமரிப்பு செய்யும் போதும் பிள்ளைகளின் பாதுகாப்பை கவனத்தில் கொள்வது அவசியம்.

போதுமான வெளிப்புற சூழலை கொண்டிராத பிணியாய்வு நிலையங்களில், பிணியாய்வு நிலையத்திற்குள்ளேயே ஒரு பகுதியானது பிள்ளைகள் விளையாடுவதற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும். அதில் மலிவானதும், பாதுகாப்பதுமானதுமான விளையாட்டு பொருட்களை பிள்ளைகளின் தேவைக்கேற்ப வைக்கப்படல் வேண்டும். ஒரு விளையாட்டு பொருளையாவது பிணியாய்விற்கு வரும் போது கொண்டுவருமாறு பணிப்பது உகந்தது .

## 10. பிணியாய்வை முன்னெடுக்கும் அதிகாரியின் பொறுப்புகளும் செயற்பாடுகளும்

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய குறிப்பிட்ட மாவட்டமொன்றில் முன்னெடுக்கபபடும் சகல பிணியாய்வு செயற்பாடுகளை உறுதி செய்வது மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளரின் கடமையாகும்.மாவட்டத்திலுள்ள சகல வைத்திய சாலைகள், மத்திய பிணியாய்வு நிலையங்கள் உட்பட அனைத்து பிணியாய்வுகளின் தரம் மற்றும் மேற்பார்வை செய்யும் பொறுப்பு தாய் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியினுடையதாகும். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிணியாய்வு நிலைய நிர்வாக செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை செய்யும் பொறுப்பு அக்குறிப்பிட்ட சுகாதார வைத்திய அதிகாரியினுடையதாகும்.

வைத்திய சாலைகளில் இயங்கும் பிணியாய்வு நிலையங்களின் நிர்வாக பொறுப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் பொறுப்பு அவ்வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியின் /பணிப்பாளரினுடையதாகும்.

## 11. பிணியாய்வு நிலை நிர்வாகம்

நிர்வாகம் மற்றும் சேவை வழங்கல் சுகாதார வைத்திய அதிகாரியின் /நிலைய பொறுப்பதிகாரியின் /பிணியாய்வை நடாத்தும் வைத்திய அதிகாரியின் பொறுப்பாகும்.

பிணியாய்வு நிலைய செயற்பாடுகளை திறம்பட நிர்வகிக்க இப்பிணியாய்வு திட்டமிடல் ஒன்று சுகாதார வைத்திய அதிகாரியினால் பொது சுகாதார தாதி சகோதரிகள் அல்லது ஏனைய மேற்பார்வையிடும் அதிகாரிகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு அதனை காரியாலயத்தில் பிரசுரிக்க வேண்டும்.

திட்டமிடல் ஒன்றை திறம்பட அமைக்க சகல பிணியாய்வுகளும்/ பிணியாய்வு நிலையங்களும் தரமாக மேற்பார்வையிடப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும் இதற்காக சரிபார்க்கும் பட்டீயலை பாவிக்க முடியும். ( இணைப்பு 4 ஐ பார்க்க).

தரமான பிணியாய்வு சேவையை வழங்குவதற்கு பிணியாய்வு நிலையத்தில் பாவிக்கப்படும் அனைத்து உபகரணங்களும் பாவனைக்கு உகந்த நிலையில் பேணப்படல் அவசியம். மேற்பார்வையின் போது உபகரணங்களின் தரம் பரிசோதிக்கப்பட்டு இதில் ஏதேனும் குறைகள் காணப்படின் கூடிய சீக்கிரம் திருத்துவதற்கும், பாவனைக்கு உகந்ததல்லாத உபகரணங்களை பிரதியீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்.

பாவனைக்கு உதவாத பொருட்களை பொருத்தமான அறிவுறுத்தல்களிற்கமைய வருடம் ஒரு முறையாவது அகற்றுதல் வேண்டும்.

11.1 **கடமைப்பட்டியல்**

- பிணியாய்வின் கடமையானது சகல கு.சு.சே. உத்தியோகத்தர்களிற்கும் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டு கடமைப்பட்டியலானது தயார் செய்யப்படல் வேண்டும். (உதாரணத்தை பார்க்க).

- பிணியாய்வு தினங்களில் விடுமுறை எடுத்தலை கூடுமானவரை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். விடுமுறை எடுக்கும் போது பிணியாய்வு நிலைய செயற்பாடுகள் பாதிக்காத வகையில் பதில் உத்தியோகத்தர் ஒருவர் பணியில் இருத்தல் வேண்டும்.

அவசர சந்தர்ப்பங்களில் பதில் உத்தியோகத்தர் ஒருவர் கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னரே பிணியாய்வு தினங்களில் விடுமுறை அனுமதிக்கப்படல் வேண்டும்.

- பிணியாய்வு ஒன்றிற்கு பங்கு பற்ற வேண்டிய கு.சு.சே உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது சேவை பெறுநரின் எண்ணிக்கைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.
- சாதாரண ஒரு பிணியாய்வு நிலைய செயற்பாடுகளிற்கு 03 கு.சு.சே உத்தியோகத்தர்கள் போதுமானது எனினும் தேவைக்கேற்ப எண்ணிக்கை மாறுபடலாம்.

உதாரணம் - பிணியாய்வு கடமை திட்டமிடல்.

| | **பன்முக பிணியாய்வு** | தை | | மாசி | | பங்குனி | | சித்திரை | | ..... | | ..... | | கார் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | | | | | 1 | 2 |
| 1 | பிணியாய்விற்கு முதல் நாள் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். | A | A | A | A | A | A | A | A | | | | | A | A |
| 2 | கர்ப்பிணித்தாய்மார்/ பிரசவத்திற்கு பின்னரான தாய்மார்/ சிசுக்கள்/சிகிச்சை பெறுநர் - பதிவு செய்தல்.<br>- இலக்கம் வழங்கல்<br>- உயரம்/ நீளம் அளத்தல்<br>- நிறை அளத்தல்/ அதனை திட்டமிடல்<br>- பதிவை மேற்கொள்ளல்/திரிபோஷா விநியோகித்தல | B | A | C | C | B | A | B | A | | | | | | |
| 3 | சுகாதார கல்வி/ சிறுநீர் பரிசோதனை/ பொது பரிசோதனைகள் | A | | | | | | | | | | | | | |
| 4 | தாய்மார்/சிசுக்கள்/ சிறுவர்கள் பரிசோதிக்க உதவுதல் | C | | | | | | | | | | | | | |
| 5 | நோய்த்தடுப்பூசி வழங்கல்/ நிரிபிபீடனமாக்கல்<br>- தடுப்பூசி சார்ந்த பக்க விளைகளை கண்டறிதல்<br>- விற்றமின் A பெற்றுக் கொடுத்தல் | A | | | | | | | | | | | | | |
| 6 | மருந்து, குடும்ப திட்டமிடல் சேவை வழங்கல<br>- மீள் வருகைக்கான தினம் மற்றும் நேரத்தை வழங்கல் | B | | | | | | | | | | | | | |
| 7 | பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் அடையாள முத்திரையிடல<br>- சத்திர சிகிச்சை உபகரணங்கள் சிகிச்சை உபகரணங்க்ள், மருந்து மற்றும் எழுது பொருட்களை பெற்றுக் கொள்ளல் | C | | | | | | | | | | | | | |

A பிரதேசத்திற்குரிய குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் / காரியாலய கு.சு.சே. உத்தியோகத்தர்.

B பிரதேத்திற்குரிய குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

C பிரதேசத்திற்குரிய குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

### 11.2 சுகாதார கல்விக்கான வருடாந்த திட்டமிடல்

சுகாதார கல்வியானது சகல பிணியாய்வு நிலையங்களிலும் குழுக்களுக்கோ அல்லது தனி நபருக்கோ அவா்களின் தேவைக்கேற்ப வழங்கப்படல் வேணடும். சுகாதார கல்வி சம்பந்தமான முன் ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும். குழு ஒன்றிற்கான சுகாதார கல்வியை வடிவமைக்கும் போது இலக்கு குழுவினரையும் முன்திட்டமிடலையும் கருத்தில் கொள்ள வேண்டும். சுகாதாரக் கல்விக்கான தலைப்புகளின் பட்டியலானது பிணியாய்வு நிலையங்களில் பேணப்படல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பிணியாய்வு தினத்திற்கும் இக்கடமையை நிறைவேற்ற பொறுப்பதிகாரி ஒருவா் நியமிக்கப்படல் வேண்டும்.

- சுகாதார கல்விக்கு அவசியமான துணை சாதனங்களை பாவித்தல் உகந்தது
- இது தொடர்பாக வெவ்வேறுபட்ட சுகநல கல்வி முறைகளை பயன்படுத்த வேண்டும்.
- குறிப்பிட்ட பிரதேசத்திற்கு ஏற்ற வகையிலும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமைதல் வேண்டும்.
- தற்கால தேவைக்கேற்ப மாற்றி அமைக்கப்படல் வேண்டும்

சுகநல கல்வி தொடர்பான செயற்பாடுகள் குறிப்பிட்ட ஆவணங்களில் பதியப்படல் வேண்டும். (உ+ம்:H 518

தனிநபா் தேவைக்கேற்ப தனிப்பட்ட ரிதீயிலான சுகநல கல்வியும் வழங்கப்படல் வேண்டும்.

## 12. பிணியாய்விற்கான முன் ஆயத்தம்.

பிணியாய்வு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு பொறுப்பான (அல்லது பொறுப்பளிக்கப்பட்ட குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்) குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரால் முன் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வாயத்த வேலையானது பிணியாய்வு தினத்திற்கு முன் தினம் மாலை வேளையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். சிற்றூழியர்கள் இருக்குமிடத்து அவா்களது உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் (உ+ம்:- பிணியாய்வு நிலையத்தை சுத்தம் செய்தல்) நிறுவனத்திற்கான பிணியாய்வு முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் அவ்நிறுவனத்திற்கான மருத்துவமாதின் கடமையாகும். வைத்தியசாலைகளில் உதவி ஊழியா்களின் பங்களிப்புடன் ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும். (வளாகத்தை சுத்தம் செய்தல்)

## 13. தடுப்பு மருந்தேற்றல்

தாய்/சேய் பிணியாய்வு நடைபெறும் நாட்களில் அனைத்து விதமான தடுப்பு மருந்து வகைகளும் (தடுப்பு மருந்தேற்றல் காப்பில் குறிப்பிடப்பட்ட) வழங்கப்படல் வேண்டும். தடுப்பு மருந்து வழங்கப்படவேண்டிய வயதெல்லையை கடந்திருப்பினும் கூட அக்குழந்தைக்குரிய மருந்தை வழங்குவதற்கான ஆயத்ங்களை மேற்கொள்ள வேண்டும். (மேலதிக தகவல்களினை அறிய தடுப்பு மருந்தேற்றல் கைநூலை உபயோகிக்கவும்).

ஏதேனும் காரணங்களிற்காக குழந்தைக்கு தடுப்புமருந்து வழங்கப்பட்டிருக்காவிடின் விரைவில் நடைபெறவிருக்கும் பிணியாய்வு தினத்திற்கு அல்லது மத்திய பிணியாய்வு நிலையத்திற்கு வரவழைத்து அம்மருந்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வெளிப்பிரதேசத்திற்குரிய குழந்தை அத்தினத்திற்குரிய சேவையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு வருகைதருமிடத்து அத்தினத்திற்குரிய சேவைகளை வழங்குவதுடன் மறுதரிசிப்பிற்கு அவா்களிற்குரிய பிணியாய்வு நிலையத்திற்கு பரிந்துரை செய்தல் வேண்டும்.

## 14- குளிா் சங்கிலி

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய சகல தடுப்பு மருந்துகளின் குளிா் சங்கிலியை பேணுதல் கட்டாயமானதாகும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரி காரியத்திலிருந்து சேவை பெறுநரிற்கு வழங்க தடுப்பு மருந்துகளை கொண்டு வரும்போது மீதமாகும் தடுப்பு மருந்துகளை மீண்டும் சு.வை.அ. காரியாலயத்திற்கு கொண்டு செல்லும் போது குளிர்சங்கிலியை பேணுதல் அத்தியாவசியமாகும். குளிர்சாதனப் பெட்டியின் குளிா் சங்கிலி தொடர்பான பதிவுகளை உரிய பதிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 15. தொற்றுக்களை கட்டுப்படுத்தல்

பிணியாய்வில் பயன்படுத்தப்படும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் அனைத்தும் 100 % கிருமியளிப்பு (sterilized) செய்யப்பட்டிருப்பதுடன் தொற்றுக்களை கட்டுப்படுத்துமுகமாக அனைத்து ஊழியா்களும் அவதானத்துடன் செயல்படல் வேண்டும் (உ+ம் முறையாக கைகளை கழுவுதல் உள்ளடங்கலாக). பிணியாய்வின் கழிவகற்றல் செயன்முறையானது தரப்பட்ட அறிவுறுத்தல்களிற்கமைய நடைபெறல் வேண்டும். (உ+ம்: பாவித்த சிரிஞ்சர்ஸ் மற்றும் ஊசிகள் அனைத்தையும் பாதுகாப்பு பெட்டியில் (safety' box) மாத்திரம் இடுவதுடன் அவற்றை உரிய காலத்தில் உரிய முறையில் அகற்றுதல் வேண்டும் பிணியாய்வின் முடிவில் உபகரணங்களையும் பிணியாய்வு நிலையத்தையும் தொற்றுநோய் கட்டுப்பாட்டு அறிவுறுத்தல்களிற்கமைய சுத்தம் செய்தல் வேணடும்.

பாவனைக்கு உதவாத பழுதடைந்த உபகரணங்களை தரப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய (2009.10.01 திகதியிடப்பட்டு 01/36/2009 இலக்கமிடப்பட்ட பொது சுற்று நிருபம்) அகற்றல் வேண்டும்.

16. பிணியாய்வு அறிக்கைகளையும் பதிவுகளையும் பேணுதல்.

- பிணியாய்விற்கான வரவு பதிவேடு – H 517
- பிணியாய்விற்கான நிர்ப்பீடனமாக்கல் பதிவேடு H 1216
- தடுப்பு மருந்தேற்றலின் பின்னர் ஏற்படக்கூடிய உபாதைகள் தொடர்பான பதிவேடு (AEFI)
- கர்ப்பிணிகளின் குறிப்பேடு- H 512 A மற்றும் B
- சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேடு A மற்றும் B பகுதிகள்
- குடும்பத்திட்டமிடல் மாதாந்த அறிக்கை H 1200 A
- குடும்பத்திட்டமிடல் பிணியாய்வு அறிக்கை H 1153
- குடும்பத்திட்டமிடல் சேவைபெறுநர் அறிக்கை H 1155
- பிணியாய்வு சாராம்சம் - H 518
- சுகவனிதையர் பிணியாய்வு அறிக்கை
- சுகவனிதையர் பிணியாய்வு பதிவேடு
- PAP பரிசோதனைக்கான கோரிக்கைப் படிவம்.
- போஷணைப்பிணியாய்விற்கான பதிவேடு
- மும்மாதத்திற்கான தாய், சேய் பிணியாய்வு அறிக்கை H 527
- திரிபோஷா பதிவேடு
- நுகர் பொருள் அறிக்கை (consumable register)
- தடுப்பு மருந்து பதிவேடு
- பிணியாய்வு மேற்பார்வை அறிக்கைக்கான கோவை
- மேற்பார்வை மற்றும் பிற அதிகாரிகளின் பதிவேடு
- வேறு பொருத்தமான பதிவேடுகள்

**பிணியாய்வு மேற்பார்வை**

வைத்தியசாலைகள் மற்றும் வெளிக்கள நிலையங்களில் முன்னெடுக்கப்படும் பிணியாய்வுகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் அம்மாவட்டத்திற்குரிய பிரதேச சுகாதார வைத்திய பணிப்பாளருக்குரியதாகும். இப்பிணியாய்வுகளின் தரம் தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான மேற்பார்வைகள் தாய், சேய் சுகாதார வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்படும். மாவட்டத்திற்குரிய மேற்பார்வைக் குழாமில் தாய், சேய் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார தாதிய சகோதரி (RSPHNO) உள்ளடக்கப்படுவர்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட வெளிக்கள நிலையங்களில் முன்னெடுக்கப்படும் பிணியாய்வுகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு செயற்பாடுகள் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உள்ளடங்கலாக பிரதேசத்திற்குரிய தாய், சேய் சுகாதார வைத்திய அதிகாரிகள் அடங்கிய குழாம் (உதவி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார தாதிய சகோதரி மற்றும் மேற்பார்வையிடும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்) மூலம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படும் பிணியாய்வுகளை ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை செய்தல் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியின் கடமையாகும். மேலும் வைத்தியசாலையில் நடைபெறும் வெளிக்கள பிணியாய்வு நிலையங்களை மேற்பார்வை செய்தலுக்காக பிரதேச மேற்பார்வை உத்தியோகத்தர்களின் (சுகாதார வைத்திய அதிகாரி) உதவிகளை நாடமுடியும்.

குறிப்பு :- வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் பிணியாய்வுகளிற்கு பொ.சு.தா.ச அல்லது மே.கு.சு.சே.உ பிரசன்னமாகாவிடினும் மேற்பார்வைகளை முன்னெடுக்க வேண்டும்.

சகல விதமான நடவடிக்கைகளும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மூலம் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். இதற்காக குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரை மேற்பார்வை செய்யும் உபகரணத்தை வழிகாட்டி கைநூலாக பயன்படுத்தலாம்.

## பிணியாய்வு ஒன்றின் செயற்பாடு / நடவடிக்கை இணைப்பு 1

பிணியாய்வு ஒன்றின் செயற்பாடு தொடர்பான மேலதிக தகவல்களிற்காக அது தொடர்பான சுற்று நிருபங்கள் மற்றும் வழிகாட்டிகளை பார்க்க.

செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரம் பின்வருமாறு

**அனைத்து பிணியாய்வுகளினதும் பொதுவான செயற்பாடுகள்**

| செயற்பாடு | செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் /அதிகாரி |
|---|---|
| பிணியாய்விற்கான முன் ஆயத்தம் | கு.சு.சே.உ ( PHM)* |
| சேவைபெறுநரை வரவேற்றல் | கு.சு.சே.உ ( PHM)* |
| இலக்கம் வழங்குதல் | கு.சு.சே.உ ( PHM)* |
| பதிவுகளை மேற்கொள்ளுதல் | கு.சு.சே.உ ( PHM)* |
| சேவைபெறுநர் பதிவுகளை தேர்ந்தெடுத்தல் | கு.சு.சே.உ ( PHM)* |
| சுகநல கல்வி வழங்குதல் | கு.சு.சே.உ ( PHM)* |
| நுண்ணூட்டச்சத்து/திரிபோஷா வழங்குதல். | கு.சு.சே.உ ( PHM)* |
| அடுத்த பிணியாய்வு அமர்விற்கான தினத்தை வழங்குதல் | கு.சு.சே.உ ( PHM)* |
| பிணியாய்வு நிறைவின் போது பதிவு மற்றும் அறிக்கைகளை நிகழ்நிலைப்படுத்தல் | கு.சு.சே.உ ( PHM)* |
| பிணியாய்வு நிறைவின் பின் வளாகத்தை சுத்தம் செய்தல் | கு.சு.சே.உ ( PHM)* / உதவி சுகாதார ஊழியர்கள்/தன்னியலாளர்கள் |
| பிணியாய்வு மேற்பார்வை | சு.வை.அ/உ.சு.வை.அ/பொ.சு.தா.ச/மே.கு.சு.சே.உ |

- தேவை ஏற்படின் பொ.சு.ப (PHI) இன் உதவியை பெற்றுக்கொள்ளலாம்.

**<u>தனித்துவமான செயற்பாடுகள்</u>**

| கர்ப்பிணித்தாய்மாருக்கான பிணியாய்வு | |
|---|---|
| **செயற்பாடுகள்** | **செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்/ அதிகாரி** |
| கர்ப்பிணித்தாய்மாருக்கான வகுப்புகள் | கு.சு.சே.உ (PHM) |
| நிறை, உயரம் அளத்தல், நிறையை வரைபுபடுத்தல், உயிர்த்திணிவுச் சுட்டி (BMI) கணித்தல், சிறுநீர் பரிசோதனை | கு.சு.சே.உ (PHM) |
| கர்ப்பிணித்தாய்மாரை பரிசோதித்தல் (குருதி அமுக்கம் அளத்தல் உள்ளடங்கலாக) மற்றும் பொருத்தமான குறிப்புகளை எழுதுதல்.<br><br>பிரச்சனைகளையுடைய தாய்மார்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுத்தல், சிகிச்சை, கருத்துரை (counseling), விசேட சேவைகளிற்காக பரிந்துரை செய்தல்.<br>குருதி வகைப்படுத்தல் (grouping), Rh மற்றும் VDRL பரிசோதனைக்காக பொது சுகாதார தாதி சகோதரி இல்லாதவிடத்து குருதி மாதிரிகளை சேகரித்தல் | சு.வை.அ/உ.சு.வை.அ/வை.அ<br>MOH/AMOH/ MO<br><br>பிணியாய்வு ஒன்றை வைத்திய அதிகாரி ஒருவர் எப்பொழுதும் மேற்கொள்ளுதல் வேண்டும். அலுவலக தேவைகள் நிமித்தம் மாத்திரம் இதனை முன்னெடுக்கமுடியாதவிடத்து RDHS இற்கு அறிவிப்பதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை பொது சுகாதார தாதி சகோதரி ஒருவரிற்கு ஒப்படைக்க முடியும். |
| குருதி வகைப்படுத்தல் (grouping) மற்றும் VDRL பரிசோதனைக்காக குருதி மாதிரியை சேகரித்தல் | பொ.சு.தா.ச (PHNS) |
| குருதி சர்க்கரை அளவு மற்றும் ஈமோகுளோபின் பரிசோதனை, தடுப்பூசி வழங்கலும் அது தொடர்பாக விளக்கமளித்தலும். | கு.சு.சே.உ (PHM) |

| பிரசவத்திற்கு பின்னரான பிணியாய்வு | |
|---|---|
| **செயற்பாடு** | **செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் /அதிகாரி** |
| சிசுக்களின் நிறை மற்றும் தலைச்சுற்றளவினை அளந்து வரைபுபடுத்தல் /அட்டவணைப்படுத்தல்<br>EPDS ஐ பயன்படுத்தி பிரசவத்தின் பின்னர் தாய்மார்களின் உளநிலை தொடர்பாக ஆய்வு செய்து தேவை ஏற்படின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு பரிந்துரை செய்தல். | கு.சு.சே.உ (PHM) |
| **தாய்மார்களிற்கு**<br>வெளிக்களங்களில் பிற்பிரசவ பராமரிப்பு தொடர்பாக அவதானித்து கணிப்பாய்வு செய்தல்<br>கு.சு.சே.உ ஆல் அவதானிக்க முடியாத பிரச்சனைகளை கண்டறிதல்<br>குடும்பத்திட்டமிடல் தொடர்பான கருத்துறை / அறிவுறுத்தல்களை வழங்குதலும் அதற்கான சேவைகளை வழங்குதலும்.<br>மகப்பேற்றிற்கு பின்னர் தாய்மார்களிற்கான மருத்துவப் பரிசோதனைகளை செய்தலும் (குருதியமுக்கம் அளத்தல் உள்ளடங்கலாக) உரிய குறிப்புகளை பதிவு செய்தலும்<br>பிரசவத்திற்கு முன்னரான மற்றும் பிந்திய நோயுற்ற வீதத்தை (morbidities) அவதானித்தல்<br><br>**குழந்தைகளிற்கு**<br>பூரண மருத்துவ பரிசோதனையை செய்தல்<br>தாய்ப்பாலூட்டலை அவதானித்தலும்,<br>பிரச்சனைகளை இனங்கண்டு தீர்வு வழங்குதலும் தேவையேற்படின் பொருத்தமான<br>சிகிச்சை/அறிவுரை/பரிந்துரைகளை செய்தல் | சு.வை.அ/உ.சு.வை.அ/வை.அ<br>( MOH/AMOH/ MO)<br><br>பிணியாய்வு ஒன்றை வைத்திய அதிகாரி ஒருவர் எப்பொழுதும் மேற்கொள்ளுதல் வேண்டும். அலுவலக தேவைகள் நிமித்தம் மாத்திரம் இதனை முன்னெடுக்க முடியாதவிடத்து RDHS இற்கு அறிவிப்பதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை பொது சுகாதார தாதி சகோதரி ஒருவரிற்கு ஒப்படைக்க முடியும். |

| சேய்/குழந்தை நல பிணியாய்வு | |
|---|---|
| **செயற்பாடுகள்** | **செயற்பாடுகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்/அதிகாரி** |
| CHDR “ B” பகுதிகளை தெரிவு செய்தல் | கு.சு.சே.உ (PHM) |
| தடுப்பு மருந்து பெற்றுக்கொள்ளவரும் அனைத்துக் குழந்தைகளினதும், குறித்த மாதத்தில் நிறையை அளக்காத குழந்தைகளினதும், நிறையை அளத்தல், உரிய வயது பிரிவினருள் உயரத்தை அளத்தலும், அளவீடுகளை குறித்து வரைபுபடுத்தலும்.<br>பிரச்சனைகளை இனங்கண்டு அதற்குரிய குழந்தைகளை சுகாதார வைத்திய அதிகாரிக்கு வழிநடத்தல்/பரிந்துரைத்தல் | கு.சு.சே.உ (PHM) |
| உயர்நிலை விருத்தியை அடைதலுக்கான கணிப்பிடுகளை செய்தலும் இதற்கு ஊக்கமளித்தலும் | கு.சு.சே.உ (PHM) |
| குழந்தைகள், சிறுவர்கள் முன்பள்ளி சிறுவர்களை மருத்துவ பரிசோதனை செய்தல் (1,2,4,6,9,12 மற்றும் 18 மாதங்களிலும் 3,4, மற்றும் 5 வயதுகளிலும்.)<br><br>பிரச்சனைகள் இனங்காணப்பட்ட குழந்தைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுத்தல்.<br><br>வெளிக்கள நிலையங்களிலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட குழந்தைகளை மருத்துவ பரிசோதனை செய்தலும், தேவையேற்படின் விசேட பராமரிப்பின் பொருட்டு பரிந்துரை செய்தல் | MOH/AMOH/MO<br>சு.வை.அ/உ.சு.வை.அ/வை.அ<br><br>பிணியாய்வு ஒன்றை வைத்திய அதிகாரி ஒருவர் எப்பொழுதும் மேற்கொள்ளுதல் வேண்டும். அலுவலக தேவைகள் நிமித்தம் மாத்திரம் இதனை முன்னெடுக்க முடியாதவிடத்து RDHS இற்கு அறிவிப்பதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை பொது சுகாதார தாதி சகோதரி ஒருவரிற்கு ஒப்படைக்க முடியும். |
| இறுதியாக வழங்கப்பட்ட தடுப்பு மருந்தின் பின்னர் நிர்ப்பீடனமாக்கலை தொடர்ந்து வரும் பக்கவிளைவுகள் (AEFI) தொடர்பாக விசாரணைகள் செய்தல் (AEFI monitoring) | |

| | |
|---|---|
| தடுப்பு மருந்து வழங்குதல்<br>தேவையான அறிவுரைகளை வழங்குதல்<br>பதிவுகளை பேணுதல் | கு.சு.சே.உ (PHM) |
| மருந்துகளை விநியோகித்தல்<br>திரிபோஷா, சிறுபொதியாக்கப்பட்ட(sachets)<br>நுண்ணூட்டச்சத்துகள், பூச்சி மருந்து வழங்குதல் | கு.சு.சே.உ (PHM) |
| சேவையை பெற்றுக்கொள்ள காத்திருக்கும்<br>குழந்தைகள் விளையாடுவதற்கான சூழலை ஏற்பாடு செய்து கொடுப்பதன் மூலம் உளவியல் மற்றும் சமுகவியல் விருத்தியை அதிகரிக்க முடியும். | கு.சு.சே.உ/தன்னியலாளர்<br>(PHM/volunteers) |

| **குடும்பத்திட்டமிடல் பிணியாய்வு** | |
|---|---|
| **செயற்பாடுகள்** | **செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்/அதிகாரி** |
| குடும்பத்திட்டமிடல் பதிவுகளை தெரிவுசெய்தலும்<br>நிகழ்நிலைப்படுத்தலும் (update), நிறை அளத்தல் | கு.சு..சே.உ (PHM) |
| சுகநல கல்வி மற்றும் கருத்துறை/அறிவுறுத்தல் வழங்குதல் | கு.சு..சே.உ (PHM) |
| குடும்பத்திட்டமிடல் சேவையை வழங்குதல்<br>ஊசிமருந்து: DMPA/OCP/ கொண்டம் (ஆணுறை)<br>தேவையேற்படின் அறிவுரை வழங்குதல் | கு.சு..சே.உ (PHM) |
| புதிய குடும்ப திட்டமிடலை மருத்துவ பரிசோதனை<br>ஏற்றுக்கொள்பவர்களின் மருத்துவப் பரிசோதனை<br>புதிய குடும்ப திட்டமிடல் முறைகளை பாவிப்போரின் மருத்துவப் பரிசோதனை (ஆண்டுதோறும்)<br>குருதியமுக்கத்தை பரிசோதித்தல்.<br>பொருத்தமான குடும்பத்திட்டமிடல் சேவை, அறிவுரைகளை வழங்குதல்.<br>· IUCD ஐ உட்புகுத்தல் (கருப்பை உட்சுருள்)<br>· Jadelle பதித்தல்<br>விசேட மருத்துவ சேவைகளிற்கு பரிந்துரைத்தல்.<br>தேவையேற்படின் அறிவுரை /கருத்துரைகளை வழங்குதல் | சு.வை.அ/உ.சு.வை.அ/வை.அ<br>(MOH/AMOH/MO)<br>பிணியாய்வு ஒன்றை வைத்திய அதிகாரி ஒருவர் எப்பொழுதும் மேற்கொள்ளுதல் வேண்டும். அலுவலக தேவைகள் நிமித்தம் மாத்திரம் இதனை முன்னெடுக்க முடியாதவிடத்து RDHS இற்கு அறிவிப்பதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை பொது சுகாதார தாதி சகோதரி ஒருவரிற்கு ஒப்படைக்க முடியும் |

| **சுகவனிதையர் பிணியாய்வு (சு.வ.பி)** | |
|---|---|
| **செயற்பாடுகள்** | **செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்/அதிகாரி** |
| சு.வ.பி பதிவுகளை நிகழ்நிலைப்படுத்தல்/புதிதாக வருகைதருவோருக்கு புதிய சுகவனிதையர் பிணியாய்வு பதிவுகளை வழங்குதல் | கு.சு.சே.உ (PHM) |
| சுகநல கல்வி அறிவுறுத்தல்கள் | கு.சு.சே.உ (PHM) |
| சிறுநீர்ப் பரிசோதனை (சர்க்கரை பரிசோதனைக்காக)<br>மார்பகப் பரிசோதனை | கு.சு.சே.உ (PHM) |
| மருத்துவ பரிசோதனை<br>- குருதியமுக்கம்<br>- மார்பகப் பரிசோதனை<br>- யோனிப் பரிசோதனை<br>- PAP மாதிரி எடுத்தல்<br>பரிந்துரைகள்<br>தேவையேற்படின் அறிவுரை/கருத்துரைகளை வழங்குதல் | சு.வை.அ/உ.சு.வை.அ/வை.அ<br>(MOH/AMOH/MO)<br>பிணியாய்வு ஒன்றை வைத்திய அதிகாரி ஒருவர் எப்பொழுதும் மேற்கொள்ளுதல் வேண்டும். அலுவலக தேவைகள் நிமித்தம் மாத்திரம் இதனை முன்னெடுக்க முடியாதவிடத்து RDHS இற்கு அறிவிப்பதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை பொது சுகாதார தாதி சகோதரி ஒருவரிற்கு ஒப்படைக்க முடியும். |
| குழியவியல் பரிசோதனைக்காக (cytology test) சேகரித்த மாதிரிகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்தல். | வை.அ/பொ.சு.தா.ச/கு.சு.சே.உ<br>(MO/PHNS/PHM) |

| போஷணைப்பிணியாய்வு (சு.வை.அ. காரியாலயங்களில்) | |
|---|---|
| செயற்பாடுகள் | செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்/அதிகாரி |
| பதிவுகளைப் பேணுதல் ( பிணியாய்வு வரவுப் பதிவேடு – H 517, போஷணைப்பிணியாய்வுப் பதிவேடு, சேவை பெறுநரின் பிணியாய்வு பதிவுப் புத்தகம் போன்றவை) | கு.சு.சே.உ/ பொ.சு.ப (PHM/PHI) |
| போஷணை மதிப்பீட்டிற்கு தேவையான பொருத்தமான அளவீடுகளை சேகரித்தலும் பதிதலும்.<br>நிறை அளத்தல் உயரம் அளத்தல், உயிர்த்திணிவுச்சுட்டி (BMI) கணித்தல்), அளவீடுகளை வளர்ச்சிப்பதிவேட்டில் குறித்து பொருத்தமான குறிப்புகளை இடுதல் (உ+ம் CHDR, கர்ப்பிணிப் பதிவேடு, கருத்தரிப்பிற்கு முன்னரான சேவை பெறுநர் பதிவேடு, சேவை பெறுநரின் சுகாதார குறிப்பு புத்தகம்). | கு.சு.சே.உ/ பொ.சு.ப (PHM/PHI) |
| பிணியாய்விற்கான முதலாவது தரிசிப்பின் போதான நோய் நிலையை கண்டறிவதற்கான மருத்துவ பரிசோதனை (தேவையேற்படின் தொடர்ந்து வரும் தரிசிப்புகளிலும் மேற்கொள்ளல்) | சு.வை.அ/உ.சு.வை.அ (MOH/AMOH) |
| - முதலாவது பிணியாய்வு தரிசிப்பின் போது பிரச்சனைகளை சரியாக இனங்காணுதல்<br>. போஷணை தொடர்பான காட்டிகளை ( indicators) ஆராய்தல்<br>. மருத்துவ பரிசோதனையின் பெறுபேறுகளை ஆய்வு செய்தல். குருதிப் பரிசோதனை (FBC), ஈமோகுளோபின் (Hb) மற்றும் அது தொடர்பான ஏனைய அறிக்கை.<br>. முழுமையான விபரம் (24 மணித்தியாலத்திற்கான உணவுப்பழக்கம், பௌதீக செயற்பாடுகள், உணவுப்பாதுகாப்பு, அடிப்படைப் பாதுகாப்பு பழக்கங்கள்.<br>- எவ்வாறான தலைடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை தீர்மானித்தல் (அறிவுறுத்தல்கள் உட்பட) எவ்வாறான முறைகளை பின்பற்ற வேண்டும் அல்லது பொருத்தமான குறிப்புகள் எடுக்கும் முறையை தீர்மானித்தல்.<br>- விசேட அவதானங்கள் தேவைப்படுமிடத்து அதற்கு பரிந்துரைத்தல்.<br>- தேவையான சிகிச்சை முறையை குறிப்பிடுதல்.<br>- அடுத்த பிணியாய்வுத் தரிசிப்பிற்கான தினத்தை தீர்மானித்தல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான எதிர்காலத்திட்டம், வெளிக்கள நிகழ்நிலை பற்றிய தேவையான குறிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>- சேவை பெறுநரை பொ.சு.தா.ச க்கு பரிந்துரைத்தல் மூலம் ( பொ.சு.தா.ச இல்லாதவிடத்து மே.பொ.சு.சே.உ க்கு) வெளிக்களத்தரிசிப்புகளிற்கான முன் ஆயத்தங்கள் தொடர்பான விபரங்களை பொ.சு.சே.உ/பொ.சு.ப க்கு வழங்கல்.<br><br>தொடர்ந்துவரும் பிணியாய்வு அமர்வுகளின் போது மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் அவ்வாறு செய்துவரல் வேண்டும். | சு.வை.அ/உ.சு.வை.அ (MOH/AMOH) |
| தொடர்ந்துவரும் பிணியாய்வு அமர்வுகளில் நிகழ்நிலைப்படுத்தல்.<br><br>- முதலாவது தரிசிப்பின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தலையீடுகளின் பிரதிபலன்களை மதிப்பீடு செய்தல்<br>- முன்னேற்றங்கள் எதுவும் காணப்படாதவிடத்து சு.வை.அ/உ.சு.வை.அ அது தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து முகாமைத்துவத்திட்டத்தில் தேவையான மாற்றங்களை செய்து அதற்கு ஏற்றவகையில் செயல்படுதல்.<br>- முன்னேற்றங்கள் காணப்படுமிடத்து முகாமைத்துவத்திட்டத்தில் அடுத்த படிக்கு செல்ல தேவையான தகவல்களை பொ.சு.ம.மாதிற்கு வழங்கி பரிந்துரைத்தல்.<br>- வெளிக்கள நிகழ்நிலை செயற்பாடு எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என சேவைபெறுநரின் பிணியாய்வு குறிப்பு புத்தகத்தில் குறிப்புகள் இடுதல்.<br>- உரிய PHM/PHI க்கு தகவல் வழங்குவதன் மூலம் நிகழ்நிலைப்படுத்தலுக்கான ஏற்பாடுகள் செய்தல்<br>- போஷணைக் குறைபாடு நிவர்த்தி அடைந்தவர்களை பிணியாய்விலிருந்து விடுவித்தல்/போஷணை நிலையில் முன்னேற்றம் காண்பிப்பவர்களை வெளிக்கள பிணியாய்வுகளிற்கு பரிந்துரைத்து பிணியாய்விலிருந்து விடுவித்தல் தொடர்பில் அறிவுரை வழங்கல். | சு.வை.அ/உ.சு.வை.அ (MOH/AMOH)<br><br>சு.வை.அ/உ.சு.வை.அ (MOH/AMOH) இன் அறிவுறுத்தல்களிற்கு அமைய பொ.சு.தா.ச (பொ.சு.தா.ச இல்லையெனில் SPHM) |
| மேலதிக போஷணை உணவு வழங்கல் (திரிபோஷா, நுண்ணூட்டச்சத்து போன்றன) மற்றும் பூச்சி மருந்து வழங்கல் | கு.சு.சே.உ/ பொ.சு.ப (PHM/PHI) |

| | |
|---|---|
| பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை விநியோகித்தல் மற்றும் மருந்து நிலுவை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளல் | பொ.சு.தா.ச/ பொ.சு.ப (PHNS /PHI) |
| அடுத்த பிணியாய்வு அமர்வுக்கான தினத்தை வழங்குதல், வெளிக்கள நிலையங்களில் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள கு.சு.சே.உ/ பொ.சு.ப க்கு உரிய தகவல் வழங்குதல். | கு.சு.சே.உ/ பொ.சு.ப (PHM/PHI) |
| அனைத்து பிணியாய்வு பதிவுகளையும் புதுப்பித்தல்- போஷணை பிணியாய்வு பதிவு மற்றும் பிணியாய்வு முடிவில் இது பற்றிய சுருக்கம் உள்ளடங்கலாக | கு.சு.சே.உ/ பொ.சு.ப (PHM/PHI) |
| HMIS – சுகாதார முகாமைத்துவ தகவல் முறையில் போஷணை பிணியாய்வு தரவுகளை பதிவு செய்தல் | |

## பிணியாய்வு செயற்பாடுகளின் சாரம்சம்/சுருக்கம் இணைப்பு 2

| அதிகாரி/உத்தியோகத்தர் | செயற்பாடுகள் |
|---|---|
| MOH/AMOH/DMO/RMO/AMO<br>சு.வை.அ/உ.சு.வை.அ/மா.வை.அ/பி.வை.அ/உ.வை.அ) | பிணியாய்வை நடாத்துவதற்கு பொறுப்பானவர்<br>மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஏனைய பிணியாய்வு சேவைகளையும் திணைக்கள சுற்று நிருபத்தில் உள்ளவாறு நடாத்துதல்<br>விசேட மருத்துவ சேவைகளிற்கு பரிந்துரைத்தல்<br>பிணியாய்வு மேற்பார்வை செய்தல் |
| பொ.சு.தா.ச/மே.கு.சு.சே.உ (PHNS/SPHM) | பிணியாய்வு முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை.<br>சு.வை.அ பிரசன்னமாகாதவிடத்து பிணியாய்வினை நடாத்தும் பொறுப்பு PHNS இற்குரியது.<br>PHNS பிரசன்னமாகாதவிடத்து SPHM இன் உடையதுமாகும். |
| கு.சு.சே.உ ( PHM) | பிணியாய்வின் செயற்பாடுகள் அனைத்தும் PHM இன் தொழில் விபரப்பட்டியலில் குறிப்பிட்டவாறும் திணைக்கள சுற்று நிருபம் மற்றும் சேவையின் தேவை நிமித்தம் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிகளின் அடிப்படையில் நடாத்துதல் வேண்டும். |
| கு.சு.ப (PHI) | MCH பிணியாய்வு குழுவின் அங்கத்தவர்<br>பிணியாய்வு சூழலை மேற்பார்வையிடலும் தேவைகளை பூர்த்தி செய்தலும்.<br>பிணியாய்வு செயற்பாடுகளில் தேவையேற்படும் போது உதவிகளை செய்தல்.<br>உ+ம் : atd தடுப்பு மருந்து வழங்குதல்<br>பள்ளி மாணவர்களுக்கான போஷணைப் பிணியாய்வுகளில் பங்கெடுத்தல். |
| சுகாதார உதவி ஊழியர்கள் (supportive staff) | பிணியாய்விற்கு முன்தினம் பிணியாய்வு ஆயத்தங்களிற்கு உதவிகள் புரிதல். பிணியாய்வு தினத்தில் பிணியாய்விற்கான சகல செயற்பாடுகளிற்கும் உதவிபுரிதல் |
| தன்னியலாளர்கள் (volunteers) | பிணியாய்வு செயற்பாடுகளில் உதவிபுரிதல் |

(இணைப்பு 1 இனைப் பின்பற்றவும்)